

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 149வது வட்ட தி.மு.க. சார்பில், வட்ட கழக செயலாளர் த.ரமேஷ் ஏற்பாட்டில், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி, தலைமையில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிலைகள் திறப்பு விழா நிகழ்ச்சி ஆழ்வார்திருநகரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை கழக பொருளாளரும் நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவருமான டி.ஆர்.பாலுவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியனும் திறந்து வைத்து சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. வர்த்தகர் அணி மாநில செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், மதுரவாயல் வடக்குப் பகுதி செயலாளர், நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர், அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, பகுதி துணைச் செயலாளர் வே.மதியழகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஒகேனக்கல்லில் நீர்வரத்து 4 ஆயிரம் கனஅடியாக சரிவு!

பென்னாகரம், அக்.31–

கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பு மற்றும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது.தற்போது காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் ஒகேனக்கல்லில் கடந்த 9 தினங்களாக நீர்வரத்து வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று காலை ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து மேலும் சரிந்து 4 ஆயிரம் கனஅடியாக குறைந்து வந்து கொண்டிருக்கிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

# வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்திக்கிறார் டி.ஆர்.பாலு!

**இலங்கை ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ள ராமேஸ்வரம் மீனவர்களின் குடும்பத்தார் உடன் செல்கின்றனர்!**

சென்னை, அக். 31–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை இன்று சந்திக்கிறார் கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள்.

இலங்கைக் கடற்படையினரால் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 37 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களை விடுவிக்க வேண்டும் என்று அந்தச் சந்திப்பின் போது டி.ஆர்.பாலு வலியுறுத்த உள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சரை சந்திக்கச் செல்லும்போது, கைதான மீனவர்களின் குடும்பத்தினரையும் புதுடெல்லிக்கு உடன் அழைத்துச் செல்கிறார் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. இதற்காக ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்திக்க நேரம் கேட்டுள்ளதாகவும் டி.ஆர். பாலு எம்.பி. தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதி, பிடிபட்ட 37 ராமேஸ்வரம் மீனவர்களையும், 5 படகுகளையும் உடனே விடுவிக்க கேட்டுக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை!

# மதுரவாயல் தெற்குப் பகுதியில் பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.– அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தனர்!

சென்னை, அக். 31 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 149வது வட்ட தி.மு.க. சார்பில், வட்ட கழக செயலாளர் த.ரமேஷ் அவர்களின் ஏற்பாட்டில், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளரும் காரம்பாக்கம் க.கணபதி, தலைமையில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிலைகள் திறப்பு விழா நிகழ்ச்சி 29.10.2023 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு ஆழ்வார்திருநகர் (மெகா மார்ட் எதிரில்) அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை கழக பொருளாளரும் நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவருமான டி.ஆர். பாலு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன், சிலையை திறந்து வைத்து சிறப்புரை யாற்றினார்.

இந்நிகழ்வில் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ.., வர்த்தகர் அணி மாநில செயலாளர் காசி முத்துமாணிக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், மதுரவாயல் வடக்குப் பகுதி செயலாளர், நொளம்பூர் வே. ராஜன், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர், அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி,

பகுதி -கழக செயலாளர்கள்: கே.கண்ணன், மு.ராஜா, வ.செல்வகுமார், வீர.கனிமொழி, வி.ராஜேஷ், அ.விஜயபாலா, கே.குமரேசன், எஸ்.பி.. அருள், எஸ்.பாலமுருகன், ச. சங்கர்கணேஷ், செ.ரவி, பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா. பால்பாண்டியன், எஸ்.பாரதி எம்.சி., மதுரவாயல் தெற்கு - வடக்கு மாமன்ற உறுப்பினர்கள்: செல்விரமேஷ்., ஹேமலதாகணபதி, சாந்திஇராமலிங்கம், ஆ.மாலினி எம்.இ. ஸ்டாலின், ரமணிமாதவன்

மதுரவாயல் வடக்கு பகுதி, வில்லிவாக்கம் ஒன்றிய கழக நிர்வாகிகள் : தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில்சுரேஷ், ம.உதயகுமார், என்.ஜெயச்சந்திரன், எ.எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர், என்.ரவி, கே.எஸ். மாறன்குமார், கே.சங்கர், கு.சதீஷ்குமார், இரா.வினோத், ஜெயசுதா, எம்.ஜி.சாமிநாதன், எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர், அ.மோசஸ், எஸ்.அப்பன்(எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ், ஆ.ராதாசெல்வம், எஸ். ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம்.ரூபன், மூன்லைட் டி.ரவி, க.கைலாசம், எம்.எல்.நாதன், இரா.ராஜேந்திரன், வி.விஜயன், ஆர்.சேகர், கு.அருள், எஸ்.ரவி, எ.டி.எத்திராஜ், ஜி.ராமகிருஷ்ணன், எம்.கே.கமலக்கண்ணன், கோ. இராமலிங்கம், ஆர்.கர்ணல், க. பிருந்தாவனன், ஆர்.ரசூல்தீன், ஆர். ராகேஷ், ச.எழில்அரசு, கே. ராஜ்குமார், கே.முரளி, பி.சங்கர், எம்.ஆர்.சதீஷ், ஜி. குப்புசாமி, எம்.கே.ஞானசேகரன் . சி.நல்லதம்பி, ஜி.மன்மத ராஜ், துரை, நா.அப்துல்கபூர், லயன் டி.பாலாஜி, ஆர்.கருணாகரன், எஸ்.ஷகிலா, ப.ரமேஷ், கே.சரவணன், என்.சரவணன், எஸ். சரவணன், பாஸ்கரன், பி.மதிவாணன், பி.மோகன், ஏ. ராகேஷ், வி.சுரேஷ், பி.சுரேஷ், சண்முகம், பால. பிரகாஷ், பரணி, தெய்வமணி, திலகவதி, பி.பிரியா

ச.தினகரன், எஸ்.கிருஷ்ணமூர்த்தி, நா.செம்புலிங்கம், பா.வாசு, பி.புஷ்பராஜ், இ. ரஜனி (எ) சுகுமார், கு.கோவிந்தராஜ், எம்.ஜனார்த்தனன், பி.ஜெயபிரகாஷ், வெ.ஏழுமலை, சி.ஆர்.இன்பராஜ், வாணிகுமரேசன், ஆர்..தாமரைசெல்வன், வெங்கடேசன், மீசை செல்வராஜ், கு.ராஜா, சுந்தரிஆதிகேசவன், மா.பா.சித்ராலயம், ஆர்.சுரேஷ்பாபு, எம். மதன்ராஜ், அ.கவுஸ்பாஷா, ஏ.பிரசாந்த், அ.லாவன்யா, ஜி.பிரவின்குமார்,

பி.நவராஜ், த.தங்கபிர காசம், கு.குணசேகரன், பி.பார்த்திபன், அமுதாராமச்சந்திரன், என்.ராஜ்கமல், பொன். பச்சையப்பன், மு.ராஜலட்சுமி, மீனாகணேசன், பொன்மணிசாந்தா, நல்லதம்பி, எஸ்.நவீன்குமார், அஞ்சகம்ரவி, பா.சிவசிங்கர், பாலாஜி, ஏ.தேன்மொழி

எம். கிருஷ்ணமூர்த்தி, தி.ந.கமலநாதன், எம்.குமார், குப்பு ராஜேந்திரன், துரைசாமி, எம்.முரளி, எஸ்.ஆறுமுகம், எஸ்.அமல்ராஜ், கே.ஜெகதீசன், கே.முத்துராமன், சீனிவாசன், கே.சரவணன், ஆர். விஜய், ஆர்.வினோத், எஸ். பரத், எஸ்.கார்த்திகேயன், கே. எஸ். பிரதாபன், பெருந்தகை மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

தீபாவளியை முன்னிட்டு நெய், வெண்ணெய் உள்ளிட்ட ஆவின் பொருட்கள் தங்கு தடையின்றிக் கிடைக்க நடவடிக்கை!

# ஆவின் ஒன்றிய பொது மேலாளர்கள் மாதாந்திர ஆய்வுக் கூட்டம்!

## பால்வளத் துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் தலைமையில் நடைபெற்றது

சென்னை, அக். 31 -

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் சென்னை நந்தனம், ஆவின் இல்லத்தில் நேற்று (30.10.2023) ஆவின் பொது மேலாளர்கள் மற்றும் அனைத்து மாவட்ட துணை பதிவாளர்கள் (பால்வளம்) ஆகியோருக்கான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

ஏற்கெனவே நடந்த ஆய்வு கூட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் நிருவாக சீரமைப்பு குறித்து பிறப்பித்த உத்தரவுகளின் நிலை குறித்தும் அதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பால் உற்பத்தியாளர்களின் தரத்திற்கு ஏற்ற விலை நிர்ணயம் செய்யப்படுவதையும், விவசாயிகளிடமிருந்து பால் கொள்முதல் செய்யும் பொழுது உடனடி ஒப்புகைச் சீட்டு வழங்குவதையும், உறுதி செய்தல் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ஒப்புகைச் சீட்டு (Spot Acknowledgement) வழங்குதல் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது

விவசாயிகளுக்கு புதிய கறவை மாடுகள் வாங்க கடன் வழங்குதல், கால்நடை பராமரிப்பு கடன், புதிய சங்கங்களை உருவாக்குதல், புதிய உறுப்பினர்களை சேர்த்தல் மற்றும் தொடக்க சங்கங்களின் நிதி நிலைமையினை வலுவாக்குதல் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

தீபாவளி இலக்கினை எவ்வித தோய்வும் இல்லாமல் இலக்கினை அடைய உத்தர விட்டார். மேலும், தீபாவளியை முன்னிட்டு ஆவின் நெய், வெண்ணெய் மற்றும் அனைத்து வகையான ஆவின் பொருட்கள் பொதுமக்களிடம் தங்கு தடையின்றி கிடைக்கவும் பால் மற்றும் பால் உப பொருட்களின் விற்பனையை உயர்த்தவும் மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

ஆவினில் தீபாவளிக்கு தயார் செய்யப்பட்டுள்ள சிறப்பு இனிப்பு வகைகள் பொதுமக்களி டையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதால் அனைத்து ஒன்றியங்களிலும் இந்த சிறப்பு இனிப்பு வகைகள் அனைவருக்கும் கிடைக்க அனைத்து மாவட்ட பொது மேலாளர்களுக்கு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

ஆவின் உப பொருட்களின் விற்பனையை அதிகரிக்க மக்கள் அதிகமாக கூடும் இடங்களிலும் முக்கிய நகரங்கள் மற்றும் சுற்றுலாத் தளங்களில் புதிய ஆவின் பாலகங்கள் துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும், நகரங்கள் தோறும் புதிய முகவர்கள், மொத்த விற்பனையாளர்கள் நியமனம் செய்யவும் அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், மங்கத் ராம் சர்மா, பால்வளத்துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.வினீத்,.பண்டி கங்காதர், முதன்மை விழுப்புக்குழு அலுவலர், பால்வளத்துறை இணைப்பதிவாளர் - துணை பால் ஆணையர் ரா.இலட்சுமணக் குமார், வெ. ஆலின் சுனேஜா, பொதுமேலாளர் (விற்பனை) - நிருவாகம் (பொ) மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிருவாகப் பிரிவு, கணக்குப்பிரிவு, விற்பனைப் பிரிவு, திட்டமிடுதல் பிரிவு, கொள்முதல் பிரிவு, விழிப்புக்குழுப் பிரிவு, பொறியியல் பிரிவு, கட்டுமானப்பிரிவு, தர உறுதி, அம்பத்தூர் பால் பண்ணை மற்றும் பால் உப பொருட்கள் பண்ணை, மாதவரம் மற்றும் சோழிங்க நல்லூர் பால் பண்ணை, மற்றும் இதர பிரிவுகளை சார்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.



பம்மல் பசும்பொன் நகர் விளையாட்டு திடலில், பசும்பொன் நகர் பொது நலச்சங்கம், பசும்பொன் நகர் அறக்கட்டளை மற்றும் ஊர் பொதுமக்கள் இணைந்து நடத்திய 116வது தேவர் ஜெயந்தி விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, பகுதிச் செயலாளர் வே. கருணாநிதி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

இன்று நடைபெறுகிறது!

# கலைஞர் நகர் தெற்குப் பகுதி - வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிக்கை!

சென்னை, அக்.31-

கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்ரமணியன் ஆலோசனைபடி, விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர் நகர் தெற்கு பகுதி வட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று (31.10.2023 -செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணியளவில், கலைஞர்நகர் தெற்குப் பகுதி அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் எஸ்.உமாபதி தலைமையில் நடைபெறுகிறது.

விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, கணக்கு நிலைகுழு தலைவர் க.தனசேகரன், தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளு மாறு பகுதிச் செயலாளர் கே.கண்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

13 மொழிகளில் பரவி வரும்

# பண்புடைத் தலைவரின் நேர்காணல் !



“ஈ டிவி பாரத் “ செய்தித் தளத்திற்கு நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.10.2023 அன்று வழங்கியுள்ள நேர் காணல், இந்திய தேசிய இனங்களின் 12 மொழிகளிலும், ஆங்கிலத்திலும் வெளியாகி, தெற்கிலும் – வடக்கிலும், கிழக்கிலும் – மேற்கிலும், திராவிட இயக்கத் தலைவரின் தெளிவான கருத்துகள் பரவி, பரவலான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

‘ஈ டிவி பாரத்’ என்ற காணொலி செய்திச் செயலி (video news app) ராமோஜி குழுமத்தைச் சேர்ந்தது. இது இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் – 12 இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில், எல்லா நாட்களிலும், எல்லா நேரமும் ( 24 × 7 ) செய்திகளைக் கொண்டு செல்லும் புகழ் பெற்ற நிறுவனம் ஆகும்.

**நமது கழகத் தலைவர், அந்த செய்தி நிறுவனத்திற்கு வழங்கியிருக்கும் நேர் காணலில், திராவிட மாடல் அரசின் செயல் திட்டங்களில் தொடங்கி, மத வாதம் – மத நல்லிணக்கம், வெறுப்பு அரசியல் – பன்முகத் தன்மை, தேசிய அரசியலில் தி.மு.க.வின் பங்களிப்பு, டிஜிட்டல் மற்றும் சோஷியல் மீடியாக்களில் பா.ஜ.க.வின் பொய்ப் பரப்புரைகள், இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்று பல்வேறு கருத்து விளக்கங்களைத் தெளிவு படுத்தி உள்ளார். மேலும், “மு.க.ஸ்டாலினுக்கும் தன் உயரம் நன்றாகத் தெரியும்” என்ற தனது எண்ணத்தையும் வெளிப்படுத்தி, சில ஊகங்களுக்கும் முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.**

13 மொழிகளில் வெளியாகி இருக்கும் கழகத் தலைவரின் நேர்காணல், ஒரு தனிமனிதக் குரலாக அல்லாமல், பவள விழா காணும் மாபெரும் மக்கள் இயக்கத்தின் குரலாக – தென் திசையின் நிரந்தர தீபமாம் திராவிடத்தின் குரலாக, செவி மடுத்துத் தீவிரமாகக் கேட்கப்படுகிறது. நமது இயக்கத்தைத் தொடர்ந்து பார்த்துப் பழகி வருவோர்க்கு, தலைவரின் இந்த நேர் காணலையும், இது 13 மொழிகளில் வெளியாகி உள்ளதையும், அதனால் ஏற்பட்டிருக்கும் தாக்கத்தையும், சாதாரணமாகக் கடந்து போய்விட முடியாது.

நமது இயக்கத்தின் வளர்ச்சியில், தொடக்க காலத்தில் ஒரு கட்டம் இருந்தது. அப்போதெல்லாம் அறிஞர் அண்ணா அவர்களின் நீண்ட எழுச்சி உரைகளை, சில ஏடுகள் அப்படியே வெளியிடத் தயங்கின. கூட்டத்தில் “ அண்ணாதுரையும் பேசினார் ( Annadurai also spoke ) “ என்றுதான் ஒருவரிச் செய்தியாக வெளியிட்டன. கலைஞரும், நாவலரும், பேராசிரியரும் என மற்ற முன்னணியினரின் உரை எதுவும் – பல்லாயிரவர் கூடிய பொதுக் கூட்டங்களில் அந்த உரைகள் நிகழ்த்தப் பட்டாலும் – ஏடுகள் வெளியிட முன்வர வில்லை. அந்த அளவுக்கு ஒவ்வாமையும், வெறுப்பும் உச்சி மீதேறி உட்கார்ந்திருந்த காலகட்டம் அது.





“ சில பத்திரிகை அதிபர்கள்,ஆதிக்கபுரியினர் பார்வையில் கெட்ட வார்த்தையாகப்பட்ட பெயர் கருணாநிதி என்பது!” என்று கலைஞர் அவர்களே எழுதியிருக்கிறார்.

**தமிழ்நாடு சட்டப் பேரவையில், 15 என்பது 50 என்று பெருகியதற்குப் பிறகும், ‘இவை கண்ணீர்த் துளிகள் தானே, விரைந்து காய்ந்து வற்றிப் போகும்’ என்று பத்திரிகைகள் சில, பகற்கனவில் செயற்கைப் பரவசம் கொண்டன. தமிழ்நாட்டுக்குள்ளேயே இப்படி இருந்தது என்றால், இந்திய அளவில் குறிப்பாக, வட இந்தியாவில் நமது கட்சி தொடர்பான அணுகுமுறை அப்போதெல்லாம் எப்படி இருந்திருக்கும் என்று விளக்கிடத் தேவை இல்லை.**

1962ல் அண்ணா அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராகி, தனது கன்னிப் பேச்சில் (1962, ஏப்ரல்) , கற்றோரைக் கவர்ந்தீர்க்கும் ஆங்கிலத்தில், “I consider that the Dravidians have got something concrete, something distinct, something different to offer to the Nation at large.Therefore it is that we want self determination” என்று பிரகடனம் செய்ததற்குப் பிறகு, வட இந்திய அரசியல் மற்றும் பத்திரிகை உலகம், அண்ணாவையும் , கழகத்தையும் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியது.

‘The Illustrated weekly of India’ என்ற ஆங்கிலத்தில் அகில இந்திய அளவில் புகழ் பெற்ற இதழின் ஆசிரியர் ஏ.எஸ்.ராமன், அறிஞர் அண்ணா அவர்களுடன் நேர் காணல் நடத்தினார். அது 19.9.1965 அன்று அந்த இதழில் வெளியானது. 1965ல் தமிழ்நாடு மாணவர்களின் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் – கலைஞர் உள்ளிட்டோர் தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ( Defence of India Rules ) கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப் பட்டதால், கழகத்தின் மேல் அகில இந்தியக் கவனம் கெட்டிப் பட்டது.அதன் விளைவாகவே, ஏ.எஸ். ராமன், அறிஞர் அண்ணா அவர்களுடன் நேர் காணல் நடத்தினார்.

அந்த நேர்காணலில், “நாங்கள் பிராமணீயத்தை எதிர்க்கிறோம், பிராமணர்களை அல்ல ; கழகத்தில் இணைந்து கொள்ள ராஜாஜி வருவாரானால், கழகத்திற்கு அது உயர்வான பெருநாளாகும் ( Great Day ) ;” என்றும்; இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கான ஆறு காரணங்களாக, “ First, Hindi in the context of South India is untenable, Secondly, it represents the tyranny of the majority, Thirdly, it will reduce the South Indians to the status of secondclass citizens,” என்று அடுக்கடுக்காக அண்ணா எடுத்துரைத்ததும்; அகில இந்திய அளவில் பரபரப்பை உருவாக்கிற்று.

**அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு; The Hindu, The Mail, Hindustan Times, Amirdha Bazaar Patrika, Statesman, The Indian Express,போன்ற ஆங்கில நாளேடுகள் மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக, கழகத்துடனும், கலைஞருடனும், நல்லெண்ண அடிப்படையிலான தொடர்புகளை உருவாக்கிக் கொள்ள ஆரம்பித்தன. கலைஞர் – பத்திரிகையாளர் நேர் காணல்கள் சொற்சுவை, பொருட் சுவை, நகைச் சுவை நிரம்பி சுவாரசியமானவை. கழகத்தின் சார்பில் பத்திரிகைத் தொடர்புகளை ஒருங்கிணைத்து, உயர்த்துவதற்குப் பெரு முயற்சி மேற்கொண்டவர் மறைந்த முரசொலி மாறன் அவர்கள் ஆவார்.**

வெகு மக்கள் ஆதரவுடன் கழகம், நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டு, அகில இந்திய அரசியலில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கி, அகில இந்தியக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, வெற்றி பெற்று, ஒன்றிய அமைச்சரவையில் பங்குபெற ஆரம்பித்தது முதல், பத்திரிகைகள் – ஊடகங்கள் ஆகியவற்றுடனான நல்லெண்ணத் தொடர்பும், ஆக்கபூர்வமான உறவும், வலுவடைந்து வளர்ந்து வருகின்றது.

அத்தகைய வளர்ச்சியின் அடையாளம்தான், ‘ஈ டிவி பாரத்’, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நடத்திய நேர் காணலும், அந்த நேர் காணலை 13 மொழிகளில் விரிவாக வெளியிட்டுள்ள பாங்கும் ஆகும். **அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோர் பத்திரிகைகளுடனான உறவை, கருத்துச் சுதந்திர கவனத்துடன், பேணிப் பாதுகாத்து வந்ததை சிறு வயது முதற்கொண்டு நேரில் கண்டு, பயிற்சி கொண்டவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். அவர் அதை மேலும் செம்மைப் படுத்தி, இயக்கத்தின் நலனுக்கும், தமிழ் நாட்டின் பண்பு குறையா மேம்பாட்டுக்கும் வழி வகுத்து வருகிறார் என்பது கண்கூடு !**

**: கி.இராஜமாணிக்கம் :**

●●●